VANAVARAYAR
Institute of Agriculture
Enriching India

உழவர்
சிந்தனைக் களஞ்சியம்
மலர் 9 | இதழ் 2 | ஜூன் 2025



# உழவர்
# சிந்தனைக் களஞ்சியம்

- கோடைக்கால வேளாண்மையில் நவீன தொழில்நுட்பங்கள்
- பசுமைக் குடிலில் வெள்ளரிக்காய் வளர்ப்பு & உற்பத்தி அதிகரிக்கும் புதிய பாதை
- பசுமையின் பாதையில் பண்ணைகள் ஓர் பார்வை

வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி - 642 103



VANAVARAYAR Institute of Agriculture

VIA

# VANAVARAYAR Institute of Agriculture

Enriching India

(கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்றது மற்றும் புது தில்லி, இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தின் அங்கீகாரம் பெற்றது)

## இளங்கலை வேளாண்மை (நான்கு வருடம்)

கல்வி தகுதி +2 [ குரூப் 1, குரூப் 2, குரூப் 2A ]

தரமான கல்வி, ஆராய்ச்சி & வேளாண் விரிவாக்கம் ஆகியவற்றின் மூலம் வேளாண் உற்பத்தி மற்றும் நிலைத்தன்மையை மேன்படுத்துவதும், வேளாண் அமைப்புகளின் துணை கொண்டு கிராமப்புற வளங்களை பாதுகாத்து அதனை மேன்படுத்துவதும் இக் கல்லூரியின் நோக்கமாகும்.

### மாணவர்களின் கற்றல் மற்றும் செயல் திறனை மேன்படுத்த

- 250 ஏக்கர் விளை நிலம்
- 16 மேன்படுத்தப்பட்ட வகுப்பறைகள்
- 18 ஆய்வகங்கள்+1 'B Class'வானிலை ஆய்வு மையம்
- 14 பயிற்றுவிக்கும் மையம்
- 14 உற்பத்தி மையம்

### சிறப்பு அம்சங்கள்

- 650 பேர் இடவசதி கொண்ட இரண்டு மகளிர் விடுதி
- 450 பேர் இடவசதி கொண்ட மாணவர் விடுதி
- 470 பேர் அமரக்கூடிய உணவகம்
- 24 X 7 கண்காணிப்பு
- 6 ஏக்கர் விளையாட்டு திடல்

SAKTHI GROUP



NM 100

1923 - 2014

CENTENARY CELEBRATIONS

NIA

EDUCATIONAL INSTITUTIONS | Enlightening Minds

Visit at : https://www.via.ac.in

மேலும் விபரங்களுக்கு : +91 7402618001 - +91 9942908410

# உழவர்
# சிந்தனைக் களஞ்சியம்

✳ மலர் 9 ✳ ஜுன் 2025 (வைகாசி – ஆனி) ✳ இதழ் 2


**வெளியீடு** : **வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்**
மணக்கடவு, பொள்ளாச்சி - 642 103

**நிறுவனர்** : அருட்செல்வர் டாக்டர் **நா. மகாலிங்கம்**

**தலைவர்** : முனைவர் **ம. மாணிக்கம்**
தலைவர், என்.ஐ.ஏ. கல்வி நிறுவனங்கள், பொள்ளாச்சி

**தாளாளர்** : திருமதி. **கி. கற்பகவள்ளி**
தாளாளர், வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்

**ஊக்கம்** : **பேராசிரியர். நா. கெம்பு செட்டி,** பி எச்.டி.
இயக்குனர், வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்

**பேராசிரியர். கு. பிரபாகர்,** பி எச்.டி.
முதல்வர், வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்

**ஒருங்கிணைப்பாளர்**: **முனைவர் கா. காளிதாஸ்**
இணை பேராசிரியர், வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்

**முனைவர் பொ. மகுடீஸ்வரி**
உதவி பேராசிரியர், வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்

**தொகுப்பு** : **முனைவர் த. துர்காதேவி**
**செல்வி கு. கிருத்திகா**
**முனைவர் எம். ரம்யா**
**முனைவர் செ.கா. சங்கரி**
**முனைவர் கோ. தாமோதரன்**
உதவிப் பேராசிரியர்கள்,
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்

**வடிவமைப்பு** : **திரு. எஸ். சிற்பி பால சுப்ரமணியம்**
ஒருங்கிணைப்பாளர், வேளாண் அபிவிருத்தி மையம்
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்

**திரு. கா. முருகானந்தம்,**
ஒருங்கிணைப்பாளர், உழவர் உற்பத்தியாளர் நிறுவனம்

**விநியோகம்** : **திரு. ஆ. குமாரச் செல்வன்,** நூலகர்
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்

# பொருளடக்கம்


| வ. எண் | கட்டுரைகள் | ப.எண் |
|---|---|---|
| 1 | வேளாண் விஞ்ஞானியின் வெற்றிக்கதை | 04 |
| 2 | வேளாண் சுற்றுலா அனுபவக்கதை | 06 |
| 3 | உழவியல்துறை கட்டுரை | 08 |
| 4 | தோட்டக்கலைதுறை கட்டுரை | 10 |
| 5 | மரபியல் மற்றும் பயிர் இனப்பெருக்கத் துறை கட்டுரை | 12 |
| 6 | வேளாண் பொருளாதாரக் கட்டுரை | 15 |
| 9 | உணவு குறிப்பு - வாழைப்பூ வடை | 18 |
| 10 | கல்லூரி வளாக நிகழ்ச்சிகள் தொகுப்பு | 19-32 |



உழவர் சிந்தனைக் களஞ்சியம் இதழில் வரும் கருத்துக்களுக்கு அதன் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவர்



தொடர்புக்கு :

வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்

(கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நிரந்தர இணைவு பெற்றது மற்றும் புதுதில்லி, இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தின் அங்கீகாரம் பெற்றது)

மணக்கடவு, ஆனைமலை(வட்டம்), பொள்ளாச்சி, கோவை மாவட்டம் - 642 103

தொலைப்பேசி +91 74026 18001, மின்அஞ்சல் : usk@via.ac.in.

அச்சிட்டோர்

**ருக்குமணி ஆப்செட் பிரஸ்**

E-2 சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், கோவை - 641 021.

போன் : 99655 37132 மெயில் : office.rukumaniop@gmail.com

# முதல்வர் உரை

"பசுமையின் பாதையில் அறிவின் தேடல்..."

வணக்கம் உறவுகளே,

பசுமை என்பது ஒருவேலை பசுந்தழையின் நிறம் என தோன்றலாம். ஆனால் நம் உழைப்பின் கனியும், அறிவின் வளர்ச்சியும், இயற்கையை நேசிக்கும் நம் எண்ணங்களும் சேர்ந்ததுதான் உண்மையான பசுமை. இத்தொடரில், இயற்கையுடன் இசைவான நவீன வேளாண்மையைப் பற்றி பேசும் இந்த மாத இதழ், ஒரு அறிவுத் தேடலின் பயணமாக அமைந்திருக்கிறது.

கோடைக்கால சவால்கள், வெப்பத்தில் வாடும் நிலங்கள், திடீர் சூழ்நிலை மாற்றங்கள்... இவற்றுக்கு எதிராக நவீன தொழில்நுட்பங்களுடன் பயிர் செய்யும் உத்திகளை "கோடைக்கால வேளாண்மை" என்னும் கட்டுரை மூலம் அரியலாம்.

இதில் இடம் பெற்றுள்ள "பசுமைக் குடிலில் வெள்ளரிக்காய் வளர்ப்பு பற்றிய ஒரு அறிவியல் கூர்மையும், நடைமுறை விளக்கமும்" என்ற விரிவான கட்டுரை பசுமையில் ஒரு தொழில்நுட்பப் பயணம் என்பது நமக்கு விளக்கும்!

குங்குமப்பூவின் மணமும் மருந்தும் ஆன்மீகமும் கலந்த உலகின் ஒரு விலைமதிக்க முடியாத மசாலா. இதன் வரலாறு, மருத்துவ நன்மைகள் மற்றும் அறிவியல் பின்னணியை வாசிக்க, நம் நேரம் போவதே தெரிவதில்லை!

"ஜாப்னரின் ஒளிவிளக்கு" என அழைக்கப்படும் டாக்டர் மங்கி லால் ஜாட் அவர்களின் சாதனை, இன்றைய இளைஞர்களின் கனவும், கனவுக்கான பாதையையும் எப்படி இணைக்கலாம் என்பதை உணரலாம்.

இந்திய வேளாண்மையின் ஏற்றுமதி வளர்ச்சியை, உலக சந்தையில் நம் விவசாயத்தின் சாதனைகள் குறித்து பார்வையிட்டால், "நம் மண்ணின் வாசனை உலகம் அறிந்தது" என்பதை உணரலாம்.

உணவுப் பரிந்துரை கூறாமல் இருக்க முடியுமா? கொங்குநாட்டு பாரம்பரிய உணவான வாழைப்பூ வடை இதன் செய்முறை வாசிப்பவரின் நாக்கில் சுவையை சேர்க்கும்!

இயற்கையை நேசிக்கும் மனங்களுக்கு, தமிழ்நாட்டின் தன்னார்வ பண்ணைகள் பற்றிய சிறப்புக் கட்டுரை ஒன்று உள்ளடங்கியுள்ளது இயற்கையோடு வாழ நினைப்பவர்களுக்கு இது ஒரு அழைப்பாக இருக்கும்.

இந்த மாத இதழின் ஒவ்வொரு பக்கமும், ஒரு புதிய அறிமுகம்! ஒரு அறிவியல் பூர்வமான பசுமைக்கான கனவு!

வாசியுங்கள்... சிந்தியுங்கள்... செயல்படுங்கள்...

அன்புடன்,
**முதல்வர்**

# டாக்டர் எம். எல். ஜாட் – ஜாப்னரின் பெருமை; இந்திய வேளாண்மையின் ஒளிவிளக்கு

இந்திய வேளாண்மை வரலாற்றில் புதிய அத்தியாயமாக, ராஜஸ்தானின் ஜாப்னர் என்ற சிற்றூரைச் சேர்ந்த டாக்டர் மங்கி லால் ஜாட், 2025 ஏப்ரல் 17ஆம் தேதி, வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறைச் செயலராகவும், இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கவுன்சிலின் (ICAR) தலைமை இயக்குனராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். இந்நியமனம், டாக்டர் ஜாட் அவர்களின் தனிப்பட்ட சாதனையாக மட்டுமல்லாமல், ஜாப்னர் மக்களுக்கும் விவசாய சமுதாயத்திற்கும், மேலும் ராஜஸ்தான் மாநிலத்திற்கும் பெருமையைத் தருகிறது.

**கரிகால சோழனின் கல்லணை தமிழ் உழவின் அடையாளம்**

கரிகால சோழன் காவிரி நதியின் நீரை நிலத்துக்கு வழி செய்யக் கட்டிய கல்லணை (தஞ்சாவூர் அருகே), தமிழக வேளாண்மையின் முதன்மைச் சின்னம். இது சுமார் கிமு 2ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இன்று வரை பயன்பாட்டில் உள்ள இந்த அணை, தஞ்சை மருத நிலங்களைக் கடைபிடிக்க வழி வகை செய்த பெருமை கொண்டது.

ஸ்ரீ கரண் நரேந்திர வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் (SKNAU) சிறப்புமிக்க முன்னால் மாணவராக விளங்கும் டாக்டர் ஜாட், ஒரு சிறிய கிராமத்தைச் சேர்ந்தவராக இருந்து இந்திய வேளாண்மை ஆராய்ச்சி துறையின் உயரிய பதவிக்கு வருவதற்கான பயணமே அவரது அர்ப்பணிப்பு, ஆராய்ச்சியின் நோக்கம் மற்றும் விடா முயற்சியின் சான்றாகும்.

### அறிவுத் தேடலின் விதை ஜாப்னரில் இருந்து சாதித்த உயரம்

டாக்டர் ஜாட், ஜாப்னரில் உள்ள எஸ்.கே.என் வேளாண் கல்லூரியில் தனது இடைநிலை (வேளாண்மை) பட்டத்தை முடித்து, தனது பிரகாசமான பயணத்திற்கு அடித்தளமிட்டார். பின்னர், இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனமான (IARI), புது டெல்லியில் உழவியல் துறையில் மண்ணின் ஈரப்பதம் மற்றும் பாதுகாப்பு குறித்து தனிச்சிறப்புக் கூறுடன் தனது முனைவர் பட்டத்தைப் பெற்றார். அவரது ஆய்வுத் தலைப்பு, வளச் சிக்கனமான விவசாய முறைகள் தொடர்புடையதாய் இருந்தது இது அவரது வல்லுநர் என்ற நிலையை உருவாக்கிய முக்கியக் கூறாக அமைந்தது.

மண் பாதுகாப்பு வேளாண்மை, ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும்

காலநிலை மாற்றத்திற்கு ஏற்ற விவசாயம் ஆகிய துறைகளில் அவருடைய ஆழ்ந்த பங்களிப்பு, அவரை ஒரு பன்னாட்டளவில் போற்றப்படும் வேளாண்மை நிபுணராக உயர்த்தியுள்ளது.

**அவரது தலைமையில் ICAR**

ICAR தலைமை இயக்குனராக, டாக்டர் ஜாட் தற்போது இந்தியாவின் உயரிய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தினை வழிநடத்துகிறார். இதில் 113 ஆராய்ச்சி நிறுவனங்கள், 74 வேளாண் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகள் உள்ளனர். DARE துறைச் செயலராக, அவர் மேற்கொள்ளவிருக்கும் முக்கியப் பொறுப்புகள்:

- இந்தியாவின் வேளாண் ஆராய்ச்சி கொள்கையும், பன்னாட்டு ஒத்துழைப்புகளையும் உருவாக்குவது
- விவசாயிகளுக்கேற்ப புதிய தொழில்நுட்பங்களை உருவாக்கும் திட்டங்களை வழிநடத்துவது
- பயிற்சி, நுண்ணறிவு வளர்ச்சி மற்றும் காலநிலை சகிப்புத்தன்மை கொண்ட விவசாயத்தை வலுப்படுத்துவது
- இந்திய வேளாண்மை அறிவியலில் டிஜிட்டல் மற்றும் மரபணு புரட்சியை வழிநடத்துவது
- விக்சித் பாரத் 2047 நோக்கில், “வேளாண்மையையும் கல்வியையும் மாற்றும்“ செயல்பாடுகளை முன்னெடுத்து நடைமுறைப்படுத்துவது

டாக்டர் ஜாட் அவர்களின் வாழ்க்கையும், அவரது சாதனைகளும், நமது நாட்டின் விவசாய எதிர்காலத்திற்கு ஊக்கமளிக்கும் ஒளிக்கோவையாக இருக்கின்றன.

ஆதாரம்:The Better India,மே 2025

தமிழாக்கம்: உழவர் சிந்தனைக் களஞ்சியக் குழு
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி

---

## விதைத் தேர்வு சிறந்த பயிர்க்குத் துவக்கம்



1. உயர்தர உள்ளூர் வகைகளை (குறிப்பாக ‘பசுமை புரட்சி’ பின்னணி கொண்டது அல்லாதவை) தேர்வு செய்யவும் – நிலத்துடன் இயல்பாக ஒத்துழைக்கும்.
   - எடுத்துக்காட்டு: சாமை CO 4, நாமக்கல் சாமை, குதிரைவாலி ATL1
2. விதைகள் முறையாக சோதிக்கப்பட வேண்டும். நீரில் இட்டு மேலே மிதக்கும் தரமில்லாத விதைகளை அகற்றவும்.
3. பாதுகாப்பான விதைநேர்த்தி முறைகள் :
   - உயிரணு சார்ந்த மருந்துகள் (Trichoderma, Pseudomonas) அல்லது இயற்கை வழி பாசி, மண்/பஞ்சகவ்யம் ஊறல்

❋வேளாண் சுற்றுலா அனுபவக்கதை❋

# பசுமையின் பாதையில் தமிழ்நாட்டின் ஐந்து பண்ணைகள் ஓர் பார்வை

தினசரி பரபரப்பான வாழ்க்கையில் இருந்து சிறிது தூரம் விலகி ஓய்வெடுக்க விருப்பமா? இயற்கையை சார்ந்த வாழ்க்கையை அனுபவிக்க இந்த தன்னார்வ சேவை வாய்ப்புகளை அணுகி பாருங்கள்.

தமிழ்நாட்டைப் பற்றிப் பேசும் போதே, வெப்பமான கோடைகாலங்கள், வறண்ட பரப்புகள் போன்ற எண்ணங்களே பலருக்கும் தோன்றும். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக, இந்த மாநிலம் தன்னுடைய அந்த பழைய கதையை மாற்றி, வறண்ட நிலங்களையே பசுமைமிக்கத் தளங்களாக மாற்றும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இங்கே நாம் காணப் போகும் ஐந்து இடங்கள், தமிழ்நாட்டின் பல மூலைகளிலிருந்து, இந்த மாற்றத்தை நேரில் காணவும், அதில் பங்கேற்கவும் வாய்ப்பு தருகின்றன. விவசாயத்தில் தன்னார்வமாக பணியாற்றவேண்டியோ, நிலைத்த வாழ்வியலைக் கற்கவேண்டியோ, இயற்கையை மீண்டும் அணுகவேண்டியோ உங்கள் எண்ணம் எதுவாக இருந்தாலும், இவை உங்கள் வாழ்க்கையில் என்றும் துணையாக இருக்கும் அந்த அனுபவங்களையும் கற்றல்களையும் தரக்கூடிய இடங்கள்.

**1. பூமி பண்ணை, திருவண்ணாமலை**

தமிழ்நாட்டின் பொருளாதார ரீதியாக பின்னடைந்த மாவட்டங்களில் ஒன்றான திருவண்ணாமலையில் அமைந்துள்ள பூமி பண்ணை, நிலைத்த விவசாயம், கிராமிய வாழ்க்கை, சமூக மேம்பாடு ஆகியவற்றை மையமாகக் கொண்டு தன்னார்வ சேவை வாய்ப்புகளை வழங்குகிறது. இங்கு இளைய தலைமுறையினர் கற்றுக்கொள்வதோடு சமூகத்திற்கும் பங்களிக்கலாம்.

வருடம் முழுவதும் தன்னார்வத் தொண்டர்களை வரவேற்கும் இப்பண்ணையில், குறைந்தது 7 நாட்களுக்கு, தினமும் 4 மணி நேர பணியைச் செய்ய வேண்டும். பரிசளிப்பு பண்பாடு என்ற தத்துவத்தை பின்பற்றும் இங்கு, உணவும் தங்குமிடமும் நிர்ணய விலை இல்லாமல் வழங்கப்படுகிறது. தன்னார்வத் தொண்டர்கள் தங்களால் இயன்ற அளவில் கொடுக்கலாம்.

**2. சாலிட்யூட் பண்ணை, ஔரோவில்**

ஔரோவில்லின் பசுமை பரப்பில் மறைந்துள்ள சாலிட்யூட் பண்ணை, நிலையான வாழ்வியல் மற்றும் பசுமை உணவுக்கழக அமைப்புகளைச் சார்ந்த ஒரு உயிர்ப்புமிக்க முயற்சி. இங்கு 140க்கும் மேற்பட்ட பழங்கள், பூக்கள், காய்கறிகள் மற்றும் தானியங்கள் வளர்க்கப்படுகின்றன.

இப்பண்ணை, கையாளுவோருக்கான பயிற்சிப் பட்டறைகள், குறுகியகால மற்றும் நீண்டகால தன்னார்வ சேவை வாய்ப்புகள் வழங்குகிறது. பண்ணையில் விளைந்த

பசுமை உணவுகளை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் கஃபேயிலும் பணியாற்றலாம்.

**3. புத்த பண்ணை, ஔரோவில்**

புதுச்சேரியில் உள்ள ஔரோ பகுதியின் 11 ஏக்கர் பரப்பளவிலுள்ள புத்த பண்ணை, எப்போது வேண்டுமானாலும் சில மணி நேரம் முதல் சில மாதங்கள் வரை தன்னார்வத் தொண்டர்களை வரவேற்கிறது. இங்கு உயிரியல் சமநிலையை மீட்டெடுக்கும் நோக்குடன், சூழலுக்கு ஏற்ற விவசாய முறைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

உதாரணமாக, பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்தாமல், ஊடுபயிர் (intercropping) போன்ற இயற்கையான முறைகள் பின்பற்றப்படுகின்றன. இங்கு எளிமையான தங்குமிட வசதிகள் குறைந்த கட்டணத்தில் வழங்கப்பட்டு, வேலை முடிந்த பிறகு இலவச காலை உணவும் தரப்படுகிறது.

**4. யாஷ் பண்ணை மையம், தளி**

பெங்களூருவில் புறநகர பகுதிக்கு அருகிலுள்ள தளியில் அமைந்துள்ள யாஷ் பண்ணை மையம், நிலைத்த வாழ்வியல் மையத்தின் ஒரு இயக்கமாக செயல்படுகிறது. இங்கு மீள்பிறவி விவசாய முறைகள் (regenerative farming) பின்பற்றப்படுகின்றன.

தன்னார்வத் தொண்டர்கள், உணவு, ஆற்றல் மற்றும் வாழ்க்கைமுறை சார்ந்த நிலைத்த பயிற்சிகளை கற்றுக்கொள்வதோடு பண்ணையில் பணியாற்றலாம். தங்குமிடத்துக்கு தினசரி ₹ 750 மற்றும் உணவுக்கு ₹ 1,000 செலுத்த வேண்டும். இதில் சுத்தமான, ஆரோக்கியமான உணவு மற்றும் அமைதியான தங்குமிடமும் உள்ளடங்கும்.

**5. சேவாலயா**

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் செயல்படும் சேவாலயா, உயிர்வள உரம், இடைத்தீவனப் பயிரிடல், வளம் தயாரித்தல் ஆகியவற்றைப் பயன்படுத்தி நிலையான விவசாயத்தைப் பயில தன்னார்வத் தொண்டர்களுக்கு வாய்ப்பளிக்கிறது.

சென்னைக்கு அருகிலுள்ள காசுவா வளாகத்தில், பசுமை பண்ணையில் பணியாற்றி, அதே நேரத்தில் கிராம மேம்பாட்டுத் திட்டங்களிலும் பங்கேற்கலாம். இலவசமாக தங்கும் வசதியும், எளிய சைவ உணவும் வழங்கப்படுகின்றன. ஒரு நாள் முதல் பல வாரங்கள் வரை இங்கு தங்கலாம்.

ஆதாரம்: Just Agriculture, ஏப்ரல் வெளியீடு
தமிழாக்கம்: உழவர் சிந்தனைக் களஞ்சியக் குழு
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி



**பசுமைப் புரட்சி (Green Revolution)**

வினா: பசுமைப் புரட்சி இந்தியாவில் முதன்மையாக எந்தப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க உதவியது?

பதில்: கோதுமை – நெல்

# கோடைக்கால வேளாண்மையில் நவீன தொழில்நுட்பங்கள்

கோடைக்காலம் (ஏப்ரல் - ஜூன்) என்பது அதிக வெப்பநிலை, குறைந்த மழை, தாழ்ந்த நில ஈரப்பதம் மற்றும் திடீர் சூழ்நிலை மாற்றங்கள் காணப்படும் பருவமாகும்.

இது செயற்கை நீர்ப்பாசனம் மற்றும் மேம்பட்ட மேலாண்மை முறைகளை கையாளும் முக்கியமான பருவமாக கருதப்படுகிறது. இந்த காலத்தில் பயிர்கள் அதிகமான உஷ்ணத்தைக் கடந்து உயிர் வாழ்வதற்கும், உற்பத்தித் திறன் குறையாமல் இருக்கவும் சில முக்கிய வேளாண் தொழில்நுட்பங்களை பின்பற்ற வேண்டும்.

**1. நீர் மேலாண்மை (Water Management):**

- சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் (Sprinkler Irrigation) போன்ற நீர்ப்பாசன முறைகள் பயிரின் நீர்த்தேவையை குறைத்து, மண்ணின் ஈரத்தன்மை நிலைத்திருக்க உதவுகின்றன.
- பாசன நேரம்: அதிகாலை அல்லது மாலை நேரம் பாசனம் செய்தல் நன்று - இதனால் நீர் ஆவியாகும் விகிதமும் குறையும்.
- பாசன இடைவெளி மண்ணின் வகை மற்றும் பயிரின் வளர்ச்சி நிலையினைப் பொருத்து நீர் மேலாண்மையை நிர்ணயிக்க வேண்டும்.

**2. மூடாக்கு இடுதல் (Mulching Technique):**

- உலர்ந்த இலைகள், பயிர் கழிவுகள், வைக்கோல் போன்றவற்றை மண்ணின் மேற்பரப்பில் விரித்து, நீர் ஆவியாகும் விகிதத்தை குறைத்து, நிலத்தடி ஈரப்பதத்தை பாதுகாக்கலாம்.
- இது களை வளர்ச்சியையும் கட்டுப்படுத்தும்.

**3. தகுந்த பயிர் தேர்வு (Water Management):**

- கோடைக்கால வெப்பநிலையை தாங்கி வளரும் பயிர்கள்:
  - மானாவாரி பயிர்கள்: சோளம், கம்பு, சாமை, வரகு, திணை
  - குறைந்த அளவு நீர் தேவைப்படும் காய்கறிகள்: முருங்கை, வெண்டை, பீர்க்கங்காய், கத்தரிக்காய்
- குறுகிய காலத்தில் அறுவடைக்குப் வரும் தழைப்பயிர்கள் நுண்ணிய மேலாண்மைக்கு ஏற்றவையாக இருக்கின்றன.

**4. நிழல் மேலாண்மை (Shade Management):**

நிழல் வலைகள் (Shade Nets) : பயிர் மேற்பரப்புகளில் பயன்படுத்தலாம்.

நிழலளிக்கும் மரங்கள் (வேம்பு, வாகை, புங்கை) வரப்புகளின் இடையே

வளர்ப்பதன் மூலம் நிழல் சூழலை உருவாக்கலாம்.

**5. மண் மற்றும் நீர் பரிசோதனை (Soil and Water Testing):**

- அமில தன்மை, கார தன்மை போன்ற மண் பண்புகளின் பரிசோதனை அவசியம்.
- இதன் அடிப்படையில் உரமிடுதல், பாசன அளவு, மற்றும் பயிர் வகையை தேர்வு செய்யலாம்.

**6. ஊட்டச்சத்து மேலாண்மை (Nutrient Management):**

- வறட்சியை தாங்கி வளர்வதற்கு - ஹ்யூமிக் ஆசிட், பியூமிகோட், seaweed extract போன்றவை பயன்படுகின்றன.
- உயிர் உரங்கள் (Biofertilizers) மற்றும் பசுந்தாழ் உரங்களையும் சேர்க்கலாம்.


**முடிவுரை:**

கோடைக்காலம், இயற்கையின் சவால்களுடன் வருகிற பருவமாக இருந்தாலும், தொழில்நுட்ப அடிப்படையிலான மேலாண்மையுடன் செயல்பட்டால் பயிர்களில் அதிக உற்பத்தி மற்றும் வளமான வளர்ச்சியை பெற முடியும். இதற்கான திட்டமிட்ட முன்னேற்பாடுகள் பயிர்களின் உற்பத்தித் திறனை உறுதிப்படுத்தும்.

முனைவர். மு.கார்த்திகா மற்றும்
முனைவர். ரா.அஜய்குமார்
உழவியல் துறை
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி

**பாசன முறைகள் தண்ணீரில் சிக்கனம், பயிரில் செழிப்பு**

1. பாசனமுறை – குறைந்த நீர் தேவைக்கேற்ப எப்போது தேவைப்படுகிறதோ அப்போது மட்டும் போதுமான அளவு நீர் விட வேண்டும்.
2. சொட்டு நீர்ப்பாசனம் (Drip Irrigation) சிறுதானியங்களுக்கு குறைந்த நீர் தேவைப்படுவதால், இது மிகச் சிறந்த தேர்வாகும்.
3. மழைநீர் சேமிப்பு பழைய கூவைகள், தோட்டங்கள், உள்சிவறல் குழிகள் (percolation pits) போன்றவை பயனுள்ளதாகும்.



# பசுமைக் குடிலில் வெள்ளரிக்காய் வளர்ப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்கும் மாற்று விவசாயம்

ஒரு ஏக்கர் நிலத்தில் வெள்ளரிக்காயை வளர்த்துப் பார்த்தால், விளைச்சல் மட்டும் அதிகரிக்கிறது என்பதல்ல; வருமானமும் வேகமாக உயரும். அதுவும் பசுமைக் குடில்களில் இந்தச் சாகுபடியைச் செய்தால், காற்றுடன் வெப்பமும் கட்டுப்படுத்தப்பட்ட உகந்த சூழ்நிலையில் காய்களின் தரமும் அளவும் நிரூபணமாக உயர்கின்றன.

பசுமைக் குடில்களால் வெப்பம், ஈரப்பதம், காற்றோட்டம் போன்ற வெளிநிலையைத் தாமாக நிர்வகிக்கிறது. வெள்ளரிக்காயின் வளர்ச்சிக்கு ஏற்ற சூழல் எப்போதும் கிடைக்கப்பெற செய்கிறது. சந்தையில் இதன் தேவை ஆண்டுதோறும் நிலவுவதால், பருவத்திற்கு அப்பாற்பட்ட காலங்களில் கூட இது உயர்ந்த விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது.

**சூழ்நிலை தேவைகள் (வெப்பம், ஒளி, ஈரப்பதம்)**

வெள்ளரிக்காய்க்கு ஏற்ற வெப்பநிலை $25^0$C முதல் $35^0$C வரை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. வெப்பநிலை $18^0$C - க்கு கீழ் குறையும் பொழுது பழங்கள் சிறியதாகவும், வளர்ச்சி மந்தமாகவும் இருக்க வாய்ப்பு உள்ளது. குறிப்பாக கோடைக்காலங்களில், நீண்ட பகல் நேரமும் குறுகிய இரவும் விளைச்சலின் விகிதத்தை வெகுவாக பாதிக்கிறது.

**அதிக விளைச்சலைத் தரும் இனங்கள்**

மல்டிஸ்டார், பாலகான்ஸ்டர், டெர்மினேட்டர், Y-225, காபியா, கிங்ஸ்டர் ஆகிய ரகங்கள் தற்போது பரந்த அளவில் பயிரிடப்பட்டு வருகின்றனர். இவற்றில் பெரும்பாலானவை மகரந்த சேர்க்கையற்ற காய்க்கும் வகைகள் (partheno – carpic) இவை சந்தையில் நல்ல மதிப்பை பெற்றுள்ளன.

**வளர்ப்பு முறைகள் (அடித்தள வேலைப்பாடுகள்)**

இவற்றை சாகுபடி செய்ய படுக்கைகளை 30 செ.மீ உயரமும் 60 செ.மீ அகலமும் கொண்டவாறு அமைத்து மண்ணுடன் சேர்த்து நல்ல குப்பை உரம், வேப்பம் புண்ணாக்கு, ட்ரைகோடெர்மா போன்ற நுண்ணுயிர்கள் சேர்க்கப்பட வேண்டும். மண்ணில் கிருமி நீக்கம் செய்ய, 4% ஃபார்மால்டிஹைட் திரவத்தை பயன்படுத்த வேண்டும்.

**தேவைக்கேற்ற சீரான நீர் மற்றும் உர மேலாண்மை**

சொட்டு நீர்ப்பாசனம் மூலம் ஒவ்வொரு செடிக்கும் தேவையான அளவு நீர் வழங்குதல் வேண்டும். இதற்காக ஒவ்வொரு 30 செ.மீ இடைவெளிக்கும் ஒரு நீர் வெளியீடு குழாய் அமைத்து. உரத்தில்,

NPK (50:50:50 கி./ஹெ.) உட்பட, CMS, SSP, MOP போன்றவற்றை அளவுக்கேற்ப பயன்படுத்த வேண்டும்.

**பயிர் பாதுகாப்பு:**

பூச்சி மற்றும் நோய் தாக்கங்களை கட்டுப்படுத்த துல்லியமான திட்டமிடல் அவசியம்.

**பூச்சி மேலாண்மை:**

- வெள்ளை ஈ, த்ரிப்ஸ் போன்றவற்றுக்கு Spirotetramat + Imidacloprid பயன்படுத்தலாம்.
- புழுக்களுக்கு Emamectin Benzoate சிறந்தது.

**நோய் மேலாண்மை:**

- அடிச்சாம்பல் நோய்க்கு Metalaxyl + Mancozeb
- சாம்பல் நோய்க்கு Myclobutanil

**பயிர் பராமரிப்பு**


கொடிகளை, நெய்த வலைகளின் மேல் செங்குத்தாக படரும்படி அமைத்தல் வேண்டும். நெட்டை இன வகைகளில் ஒவ்வொரு இலைக்கூட்டிலும் ஒரு பழமும் குட்டை இனங்களில் 3 - 4 பழங்கள் வளரும்படியும் அமைக்கலாம். இவ்வகையான பராமரிப்பின் மூலம் பழத்தின் அளவும் தரமும் மேம்படுகிறது.

**அறுவடை**

30 - 45 நாட்களுக்குள் பழங்கள் அறுவடைக்கு தயாராகின்றன. முழுமையான நீளத்தை அடைந்ததும் பழங்களைப் பறிக்க வேண்டும்.

விவசாயம் இன்று சாதாரண உழைப்பிலிருந்து அறிவியல் அடிப்படையிலான முயற்சியாக மாறியுள்ளது. அதில் பசுமைக் குடில்கள், புதிய ரகங்கள், அறிவியல் பூர்வமான தாவரவியல் முறைகள் ஆகியவை நம்மை முன்னேற வைத்துள்ளது. இதற்கான சிறந்த உதாரணமாக வெள்ளரிக்காய் சாகுபடியை எடுத்துக் கொள்ளலாம்.

முனைவர் ஆறுமுகம் நித்யானந்தம்
உதவிப் பேராசிரியர் தோட்டக்கலைத் துறை
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி



**உழுவார் உலகுக்கு ஆணி –**
**திருக்குறளின் உழவுக் கருத்தியல்**

திருவள்ளுவர், உழவனையே உலகத்தை நடத்தும் அடிப்படை ஆதாரமாகக் கூறுகிறார். “உழுவார் உலகத்தார்க்கு ஆணி...” என்கிற குறளில், உழவனின் பணி வேதப் பணிக்கு ஒப்பாகப் பாராட்டப்படுகிறது. இது தமிழ்நாட்டின் பாரம்பரிய உழவுப் பார்வையை காட்டும் முக்கியமான சான்று.

# குங்குமப்பூ
# உலகின் தங்கமயமான மசாலா!

சில நறுமணப் பொருள்கள் நம்மை சுவை உலகிற்குள் இழுத்துச் செல்கின்றன. அதில் குங்குமப்பூ ஒரு மகத்துவமான நறுமணப் பொருளாக கருதப்படுகிறது. உலகின் மிக விலை உயர்ந்த மசாலாவாகக் கருதப்படும் இது, உணவுகளில் நறுமணமாக மட்டுமல்லாமல், மருத்துவமும், ஆன்மீகமும் கலந்த சக்திவாய்ந்த புனித மூலிகையாகும்.

**வரலாற்றின் வாசலில் ஒரு மஞ்சள் மின்னல்**

மூவாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக பழமையான வரலாற்றைக் கொண்ட குங்குமப்பூவின் தாயகம் பண்டைய பெர்சியா எனக் கருதப்படுகிறது. அங்கிருந்து இது இந்தியா, ஐரோப்பா மற்றும் சீனா போன்ற நாடுகளுக்கு பரவியது. எகிப்திய பாரோக்கள் இதைப் செடிகளாகவும், கிரேக்க மருத்துவர்கள் மருந்தாகவும், இந்தியர்கள் ஆயுர்வேதத்தில் நோய்களை குணப்படுத்துவதற்காகவும் பயன்படுத்தினர். ஒருகாலத்தில் குங்குமப்பூவில் ஏற்பட்ட போட்டியின் விளைவாக 'ஃப்ரான் வார்' என அழைக்கப்படும் வணிகப் போர்களும் நடந்தன!

**பூவிலிருந்து ஒரு நூலைப் பெறும் பயணம்**

*Crocus sativus* எனும் மலர் வருடத்திற்கு ஒருமுறைதான் பூக்கும் அதுவும் இலையுதிர்காலத்தில், ஒவ்வொரு பூவிலும் மூன்று மென்மையான கருஞ்சிவப்பு நூல்கள் மட்டுமே உருவாகின்றது! ஒரு கிலோ குங்குமப்பூவை தயாரிக்க 1.5 லட்சம் பூக்கள் தேவைப்படுகின்றன. இதனால் தான் இது "மணமுள்ள தங்கம்" என அழைக்கப்படுகிறது.

இந்தியாவில், காஷ்மீர் மாநிலத்தின் பாம்பூர் பகுதி இந்த தங்கப்பொக்கிஷத்தின் நிஜமான தாயகமாகும். அங்குள்ள குங்குமப்பூ அதன் மிகுதியான நிறத்திற்கும், வாசனைத் தனித்துவத்திற்கும் உலகளவில் புகழ்பெற்றது.



## உணவுக்கும் உடலுக்கும் ஒரு அரிய அன்பளிப்பு

சமையலில், இது சுவை மட்டும் அல்ல, உணவின் தன்மையையே மாற்றிவிடும். பிரியாணி, பேலா, பாரசீக புலாவ், பவுலாபைஸ் என உலகம் முழுவதும் இதன் நறுமண வசீகரம் பரவி கிடக்கின்றன.


மருத்துவத்தில், ஆயுர்வேதம், யுனானி, சீன மருத்துவம் போன்ற பாரம்பரிய முறைகள், மனச்சோர்வு, ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறு, செரிமான பிரச்சனை என ஏராளமான நலக் கூறுகளுக்கும் இதனை ஒரு இயற்கை மருந்தாகப் பயன்படுத்துகின்றனர்.

அழகுசாதனத்திலும், தோல் பிரகாசம், ஆன்டிஏஜிங், மூலிகை க்ரீம்கள் என பல தோற்ற வளர்ப்புகளில் இதன் பயன்பாடு சிறப்புடையது.

ஆன்மீகத்தில், ஹிந்துமதம், புத்தமதம் எனக் கலாசாரங்கள் முழுவதும் தூய்மையின் நிறமாகவும் ஆன்மிகத்தில் கண் திருஷ்டியை நீக்கவும் குங்குமப்பூவிற்கென்று ஒரு தனித்துவமான இடம் உள்ளது.

குங்குமப்பூ உற்பத்தி செய்யும் நாடுகளில் ஈரான் (இது உலக உற்பத்தியில் 90% க்கும் அதிகமானவை), இந்தியா (குறிப்பாக காஷ்மீர்), ஸ்பெயின், கிரீஸ் மற்றும் மொராக்கோ ஆகிய நாடுகள் முக்கியமாக அறியப்படுகிறது. இந்தியாவில், காஷ்மீர் குங்குமப்பூ அதன் ஆழ்ந்த நிறம் மற்றும் சக்திவாய்ந்த நறுமணத்திற்காக மிகவும் மதிப்புமிக்கது.

## குங்குமப்பூவின் வாழ்க்கை சுழற்சி




### 1. சமையல்

உலகளாவிய உணவு வகைகளில் குங்குமப்பூ பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது பிரியாணி மற்றும் பாரசீக அரிசி உணவுகள் முதல் ஸ்பானிஷ் பேலா மற்றும் பிரஞ்சு பவுலாபைஸ் வரை, அதன் சுவை தனித்துவமானது, மேலும் அதன் நிறம் உணவுகளை ஈர்ப்பு மிக்கவைகளாக மாற்றுகிறது.

### 2. மருத்துவம்

ஆயுர்வேதம், யுனானி மற்றும் சீன மருத்துவம் போன்ற பாரம்பரிய மருத்துவ முறைகளில் குங்குமப்பூவை ஒரு சக்திவாய்ந்த தீர்வாக கருதுகின்றனர். மனச்சோர்வு, ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள் மற்றும் செரிமான பிரச்சினைகள் போன்ற நோய்களுக்கு சிகிச்சையளிக்க இது பயன்படுத்தப்படுகிறது. நவீன ஆய்வுகள் இது ஆக்ஸிஜனேற்ற மற்றும் அலர்ஜி எதிர்ப்பு பண்புகளைக் கொண்டுள்ளது என்றும் கூறுகின்றன.

### 3. ஒப்பனை மற்றும் சாயமிடுதல்

குங்குமப்பூ தோல் பிரகாசம் மற்றும் வயதான தோற்றத்தை தடுக்கவும் அழகு சாதன பொருட்களிலும்

பயன்படுத்தப்படுகிறது. பண்டைய காலங்களில், இது அரச ஆடைகளையும், மத ஆடைகளையும் சாயமிடவும் பயன்படுத்தப்பட்டது.

**4. மத மற்றும் கலாச்சார முக்கியத்துவம்**

பல கலாச்சாரங்களில் குங்குமப்பூ ஒரு புனித, சின்னமாக அங்கம் வகிக்கிறது. இந்து மதம் மற்றும் பௌத்திகத்தில், குங்குமப்பூ வண்ணம் தூய்மை, மறுப்பு மற்றும் ஆன்மீகத்தை குறிக்கிறது. இது சடங்குகள், பிரசாதங்கள் மற்றும் பாரம்பரிய விழாக்களிலும் பயன்படுத்தப்படுகிறது.

**அறிவியல் கண்ணோட்டத்தில் குங்கமப்பூ**

குங்குமப்பூவின் மருத்துவ நன்மைகள் குறித்து சமீபத்தில் அறிவியல் உலகம் ஆர்வமாக ஆராய ஆரம்பித்துள்ளது:

மனநலம் குரோசின், சஃப்ரானல் போன்ற பையாக்டிவ் கலவைகள் மனச்சோர்வை குறைக்கும் திறன் கொண்டவை என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இருதய நலம் நீரிழிவு நோயாளிகளில் இரத்தச் சர்க்கரை, இரத்த அழுத்தம், கொழுப்பு அளவை கட்டுப்படுத்தும் திறனை குங்குமப்பூ காட்டுகிறது.

கண் ஆரோக்கியம் வயதானோருக்கு தோன்றும் மாகுலர் சிதைவு, நீரிழிவு ரெட்டினோபதி போன்ற பிரச்சனைகளில் குங்குமப்பூ பார்வைத் திறனை மேம்படுத்துகிறது.

**பயன்படுத்தும் அளவு:**

குறைந்த அளவில், குங்குமப்பூ நலமளிக்கும் ஒரு அற்புத மூலிகைதான். ஆனால் அதிகம் பயன்படுத்தினால் குமட்டல், மயக்கம் போன்ற பக்கவிளைவுகளும் உண்டு. அதனால் சுயமாக சாப்பிடும் முன் மருத்துவரின் ஆலோசனை அவசியம்.

**முடிவுரை**

மணம் மட்டுமல்ல, மருந்தும் ஆன்மிகமும்! குங்குமப்பூ இன்று உணவுக் கலவையல்ல. இது சுவை, நலன், ஆன்மிகம் ஆகியவற்றின் அழகான சங்கமம். அறிவியல் உலகமே இதன் மகத்துவத்தை ஒப்புக்கொள்ளத் தொடங்கியுள்ளது. ஆய்வுகள் தொடரும் போது, நாளைய மருத்துவத்தில் குங்குமப்பூ முக்கிய சிகிச்சை மருந்தாக மாறலாம் என்பதே நம்பிக்கை.

முனைவர். பொ. மகுடீஸ்வரி, உதவி பேராசிரியர்
(மரபியல் மற்றும் தாவர இனப்பெருக்கம் துறை)
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி



**பசுமைப் புரட்சி (Green Revolution)**

வினா: பசுமைப் புரட்சி இந்தியாவில் எந்த ஆண்டுகளில் ஏற்பட்டது?
பதில்: 1965 – 1975

வினா: இந்திய பசுமைப் புரட்சியின் “தந்தை” என அழைக்கப்படும் இந்திய விஞ்ஞானி யார்?
பதில்: முனைவர். எம்.எஸ். சுவாமிநாதன்

# உலகச் சந்தையில் உணவுப்பொருள் உற்பத்தியில் இந்திய வேளாண் துறையின் தாக்கம் - இந்திய வேளாண் துறையின் வளர்ச்சிப் பயணம்

இந்தியாவின் தொன்மையான கலாச்சார வரலாற்றில் வேளாண்துறை ஒரு அடிப்படை அங்கமாக இருந்து வருகிறது. இன்றும், நாட்டின் பெரும்பாலான மக்களின் வாழ்வாதாரம் இந்தத் துறையினை சார்ந்தே உள்ளது. உலகில் முக்கியமான உணவுப் பொருள் உற்பத்தியாளர்களில் இந்தியா ஒரு முதன்மை இடத்தை வகிக்கிறது.


2022-23 நிதியாண்டில் வேளாண் வளர்ச்சி விகிதம் 3.5% ஆக உயர்ந்தது. 2024-25 ஆண்டிற்கான முதற்கட்ட கணிப்பின்படி, நிலையான விலையில் மொத்த மதிப்பிலக்கு (GVA) வளர்ச்சி 3.8% என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த எண்ணிக்கைகள், இந்தியாவின் வேளாண் துறையின் நிலைத்த வளர்ச்சியை உறுதி செய்கின்றன.

### புதிய சாதனைகள்

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பயிர்களின் பட்டியலில் அரிசி, கோதுமை, பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், காபி, தேநீர், சணல், கரும்பு, புகையிலை, நிலக்கடலை, பால் பொருட்கள், பழங்கள் என எண்ணிலடங்காதவை இடம்பெறுகின்றன.

2023 - 24 இல் தேநீர் உற்பத்தி 1,382 மில்லியன் கிலோகிராம் அளவை எட்டியது. அதே சமயம் காபி உற்பத்தி 352 மில்லியன் டன் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. அரிசி, கோதுமை, மக்காச்சோளம், பருப்பு வகைகள், கடுகு, கரும்பு போன்றவைகளின் உற்பத்தி பல சாதனைகளைக் கடந்துள்ளது.


மேலும் மாநிலங்களில் மேற்கு வங்காளம், உத்தரப் பிரதேசம், பஞ்சாப், குஜராத், கர்நாடகம் போன்றவை முன்னிலை வகிக்கின்றன. (உத்தரப் பிரதேசம் மட்டும் 48% கரும்பு உற்பத்திக்கு சொந்தமானது).



**நெல்லை மாவட்டத்திலிருந்து நெல் கலகங்கள் நிலக்கடி எதிர்ப்பு**

19ம் - நூற்றாண்டில், நெல்லை, திருநெல்வேலி பகுதிகளில், நீலச் சாகுபடி கட்டாயமாக்கப்பட்ட British Rule எதிராக விவசாயிகள் கிளர்ச்சி செய்தனர். இது தமிழகத்தின் சமூக உழைப்பு மற்றும் நில உரிமை சார்ந்த மிக முக்கியமான திருப்பமாகும்.

**இந்தியாவின் உணவு மற்றும் கரும்பு உற்பத்தி (MT)**





**ஏற்றுமதியில் இந்திய வேளாண் துறையின் பங்கு**

உலகளாவிய உணவுப் பொருட்கள் ஏற்றுமதியில் இந்திய வேளாண்துறை ஒரு முக்கிய இடத்தை அடைந்துள்ளது. 2023-24 இல் வேளாண் பொருட்களின் ஏற்றுமதி ₹48.15 பில்லியன் அமெரிக்க டாலரை எட்டியுள்ளது. இதற்கு முந்தைய ஆண்டில் இது ₹52.50 பில்லியன் டாலராக இருந்தது. இதற்கு அரிசி, காபி மற்றும் கடல் சார்ந்து பொருட்களின் உற்பத்தியில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் அடித்தளமாக அமைந்துள்ளது.

தற்போது, 2024 - 25 (ஏப்ரல் - நவம்பர்) காலத்தில் அரிசி ஏற்றுமதி மட்டும் ₹63,012 கோடியாக உயர்ந்துள்ளது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், 13% அதிகம். இது போன்றே காபி ஏற்றுமதியிலும் ₹10,688 கோடி மதிப்பை எட்டியது.

கடல் சார்ந்த பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு கடல் சார்ந்த பொருட்களின் ஏற்றுமதி சுமார் 8.07 பில்லியன் US$ மதிப்பிலான பலன்கள் கிடைத்துள்ளன.

**இந்தியாவின் வேளாண்துறையின் ஏற்றுமதி நிலை (US$ பில்லியன்)**




**பன்னாட்டுச் சந்தையில் இந்தியா**

2024 - 25 வரை இந்திய வேளாண் பொருட்கள் ஏற்றுமதி அமெரிக்கா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சீனா, வங்கதேசம் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதில் அமெரிக்கா மட்டும் ₹36,117 கோடி மதிப்பிலான பொருட்களை இறக்குமதி செய்கின்றது. இது மொத்த ஏற்றுமதியில் 11.36% ஆக உள்ளது.

**வெள்ளைப் புரட்சி (White Revolution)**

வினா : வெள்ளைப் புரட்சி இந்தியாவில் எதனுடைய உற்பத்தியை அதிகரிக்க உதவியது?

பதில்: பால் - பால் சார்ந்த பொருட்கள்.

அதே சமயம், புவிசார் குறியீடு (GI) பெற்ற பொருட்களின் விழிப்புணர்வு, விற்பனையை ஊக்குவிக்க, (இந்திய அரசு பல்வேறு நாடுகளுடன் இணையவழி மற்றும் புரிந்துணர்வு சந்திப்புகளை செய்து வருகிறது. மேலும், 13 வெளிநாட்டு தூதரகங்களில் வேளாண் மையங்கள் இயங்குகின்றன.

**விவசாயிகளின் கையில் உலக சந்தையை கொண்டுவருவதற்கான சான்று கூறுகள்:**


கடந்த 2018 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட வேளாண் ஏற்றுமதி கொள்கை (AEP), இந்தியாவின் ஏற்றுமதி வளர்ச்சிக்கு ஒரு அடித்தளமாகும். இக்கொள்கையின் நோக்கங்களாவன:

- பன்னாட்டு சந்தைகளில் பங்கு பெறுவது,
- மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் உற்பத்தியை ஊக்குவித்தல்,
- பாரம்பரிய மற்றும் புதுமை சார்ந்த பொருட்களுக்கு மானியம் வழங்குதல்.

APEDA வழங்கும் நிதி உதவித் திட்டமானது (FAS), ₹5 லட்சம் முதல் ₹5 கோடி வரை உதவித் தொகையுடன், ஏற்றுமதி கட்டமைப்பு, தர மேம்பாடு மற்றும் சந்தை வளர்ச்சி போன்றவற்றை ஊக்குவிக்கிறது.

இவை தவிர, TIES, MAI உள்ளிட்ட மத்திய திட்டங்கள், மற்றும் தேயிலை, காபி, நறுமண பொருட்கள் போன்ற பல்வேறு வாரியங்களும் இந்த பசுமை வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளன.

**2025-ல் வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில் உலக நாடுகளின் பங்களிப்பு**




Source: The Ministry of Commerce & Industry

**முடிவுரை:**

இந்திய வேளாண்துறையில் புதிய தலைமுறையின் வரவு

ஏற்றுமதி வாயிலாக இந்திய விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் நோக்கில் இந்திய அரசு தீவிரமாக செயல்பட்டு வருகிறது. உலக சந்தையில், இந்திய உணவு நறுமணம் வீசும் காலம் இது. மாற்றமடையும் உலக சூழலில் இந்திய வேளாண்மை துறையின் வளர்ச்சி சர்வதேச மேடையில் இந்தியாவின் அடையாளத்தை சீரமைக்கும் பொறுப்பைத் தாங்கி நிற்கிறது.

முனைவர். க. காளிதாஸ்,
இணை பேராசிரியர் மற்றும் தலைவர்
(வேளாண் வணிக மேலாண்மைத் துறை)
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி

**✻ உணவு குறிப்பு ✻**




# வாழைப்பூ வடை

வாழைப்பு வடை, தமிழ்நாட்டின் கொங்குநாடு பகுதியில் இருந்து ஒரு சுவையான சிற்றுண்டி மற்றும் பாரம்பரிய செய்முறையாகும். மிருதுவான வாழைப்பூ வடை, ரசம், சாதம் அல்லது டீ, காபியுடன் மாலை நேர சிற்றுண்டியாகச் சிறப்பாகச் எடுத்துக்கொள்ளலாம்.



### தேவையான பொருட்கள்

| | | |
|---|---|---|
| வாழைப் பூசுத்தம் செய்து நறுக்கிய | – | 1கப் |
| சன்னா பருப்பு | – | 3/4கப் |
| உளுத்தம் பருப்பு | – | 2 டீஸ்பூன் |
| வெங்காயம் (நறுக்கியது) | – | 1 |
| பெருங்காயம் | – | 1/8 தேக்கரண்டி |
| கறிவேப்பிலை | – | 1 துளி |
| பச்சை அல்லது சிவப்பு மிளகாய் | – | 4 |
| பெருஞ்சீரகம் | – | 1 தேக்கரண்டி |
| கொத்தமல்லி இலைகள் | | |
| வறுக்க எண்ணெய் | | |

### தயாரிப்பு முறை

1. வாழைப்பூவை சுத்தம் செய்து பொடியாக நறுக்கவும். கருமையாவதைத் தவிர்க்க, ஒரு கிண்ணத்தில் தண்ணீரில் வைக்கவும்.
2. சன்னா பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பை ஒன்றாக கழுவி 12 மணி நேரம் ஊற வைக்கவும். தண்ணீரை வடிகட்டி, மிளகாய், பெருஞ்சீரகம் சேர்த்து அரைக்கவும். கொரகொரப்பாக அரைக்கவும்.
3. வாழைப்பூவை அரைத்த கலவையுடன் சேர்த்து விருப்பமான நிலைத்தன்மையில் அரைக்கவும். கலவையில், நறுக்கிய வெங்காயம், உப்பு, சாதம், கறிவேப்பிலை சேர்த்து நன்கு கலக்கவும். உங்கள் கைகளை தண்ணீரில் நனைத்து, உங்கள் உள்ளங்கையில் நடுத்தர அளவிலான வடை செய்யவும்.
4. ஒரு பாத்திரத்தில் எண்ணெயை சூடாக்கவும். வடையை எண்ணெயில் போட்டு எடுக்கவும். மிதமான சூட்டில் சமைக்கவும்.
5. இருபுறமும் சமமாக பொன்னிறமாகவும், மிருதுவாகவும் இருப்பதை உறுதிசெய்ய வடைகளை திருப்பிபோடவும்.
6. மாலை நேர சிற்றுண்டியாக அல்லது தயிர் சாதம் அல்லது ரசம் சாதத்துடன் சூடாக பரிமாறலாம்.

முனைவர். எம்.ரம்யா, உதவிப் பேராசிரியர்
உணவுத் துறை
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி

# வாழையில் அதிக மகசூல் பெற வேண்டுமா?

வாழை பிரதான பயிராக தமிழகத்தில் பயிர் செய்யப்படுகிறது. யூரியா, பொட்டாஷ் மற்றும் சூப்பர் பாஸ்பேட் என பேரூட்ட உரங்களை மண்ணில் இட்டும் வாழையில் நல்ல மகசூலை விவசாயிகளால் எடுக்க முடிவதில்லை. இதற்கு வாழை பயிரில் ஏற்படும் நுண்நூட்ட சத்து குறைபாடே காரணமாகும். இக் குறைபாட்டை போக்க நுண்நூட்ட சத்துகளை மண்ணில் இடலாம். ஆனால் அதிகப்படியான பாஸ்பரஸ் உரங்கள் பயன்படுத்துவதாலும் நமது மண்ணில் கார அமில நிலை அதிகமாக இருப்பதாலும் இந்நுண்நூட்ட உரங்களை வாழைப்பயிரால் எடுத்து கொள்ள முடிவதில்லை. இதற்கு மாற்று ஏற்பாடாக இலை வழி தெளிப்பாக நுண்நூட்ட உரங்களை கொடுக்கலாம். நுண்நூட்ட கலவை இலைவழி தெளிப்பதால் ஏற்படும் பயன்கள்.

1. நுண்நூட்ட சத்து குறைபாடு உடனே நிவர்த்தியாகிறது.
2. உரத்தின் பயன்பாடு குறைவதால் செலவு குறைவதுடன் மண் வளமும் காக்கப்படுகிறது.
3. பயிரின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து நோய் தாக்குதல் குறைகிறது.
4. பயிரின் சீரான வளர்ச்சி துரிதப்படுத்தப்பட்டு நல்ல தரமான பெரிய அதிக எடையுள்ள வாழை குலை கிடைக்கிறது.

**தெளிக்கும் முறை**

ஒரு லிட்டர் நீரில் 20மிலி நுண்ணூட்டச் கலவையுடன் தரமான ஒட்டுப் பசை சேர்த்து காலை வேளையில் 6மணி முதல் 10மணிக்குள் இலையின் மேற்பரப்பு நன்கு நனையுமாறு தெளிக்கவேண்டும். கண்டிப்பாக தெளிப்பிற்கு உப்பு இல்லாத நல்ல நீரை பயன்படுத்த வேண்டும். மழைநீர் பயன்படுத்தினால் நல்ல பலனை எதிர் பார்க்கலாம். வாழை உயரமாக இருந்து தெளிப்பு செய்ய முடியவில்லை எனில் வாழை இலையில் அடிபரப்பு நனையுமாறு தெளிப்பு செய்யலாம். தெளிப்பு நீரில் 10லிட்டருக்கு இரண்டு எலுமிச்சை பழசாறு சேர்த்து கொள்ளவும். வாழை பயிர் 4, 5 மற்றும் 6 மாதங்களில் இலைவழி தெளிப்பு செய்வதால் நல்ல பலனை எதிர்பார்கலாம்.

வெளியீடு:
உழவர் சிந்தனைக் களஞ்சியக் குழு
வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்
மணக்கடவு, பொள்ளாச்சி

**பூச்சி/நோய் கட்டுப்பாடு - இயற்கை வழி முக்கியம்**

1. பஞ்சகாவ்யம் / அஜோலைச் சாறு / எண்ணெய் தெளிப்பு / வெல்லம் சேர்த்து தயாரித்து 10 நாள் இடைவெளியில் தெளிக்கலாம்.
2. சுற்றுப்புற பயிர்கள் (Border Crops) – பூச்சிகளை வரவழைக்கக்கூடிய தாவரங்கள் (பீர்க்கங்காய், செம்பருத்தி) எல்லையில்வைத்து காக்கலாம்.
3. பூச்சிக் கொள்கலன்கள் (Pheromone Traps) முக்கியமாக கொத்தளி பூச்சிகள் (Shoot fly) போன்றவை எதிர்கொள்ள பயன்படுத்தலாம்.
4. நோய் எதிர்ப்பு கூட்டுவிளைச்சல் சாமை + பச்சை பயிர்கள் ஊடுபயிரிடலாம்.



# இரத்த தான சிறப்பு முகாம் – 12.04.2025

வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தில் மத்திய பண்ணை வளாகத்தில் ஏப்ரல் 12 அன்று இரத்த தான சிறப்பு முகாம் நடைபெற்றது. இம் முகாமை வாணவராயர் வேளாண்மை கல்வி நிறுவனத்தின் நாட்டு நலப்பணி திட்டக்குழு மற்றும் பொள்ளாச்சி அரசு தலைமை மருத்துவமனை மருத்துவ குழுவுடன் இணைந்து ஏற்பாடு செய்தனர். இம்முகாமில், நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள் சுமார் 55 பேர் மற்றும் கல்லூரியின் பேராசிரியர்கள் அனைவரும் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தனர். இம்முகாமை பொள்ளாச்சி அரசு தலைமை மருத்துவமனை மருத்துவ குழுவுடன் (இரத்த வங்கி மருத்துவ அலுவலர் முனைவர். C. மாரிமுத்து, பெரியபோது ஆரம்ப சுகாதார மைய மருத்துவ அலுவலர் முனைவர். C. U. ஸ்ரீஹரிஹரசுதன், சுகாதார ஆய்வாளர் G. கோகுல்பிரசாத், செவிலியர்கள் மற்றும் வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் நாட்டு நலப்பணி திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் முனைவர் G. தாமோதரன், முனைவர் M. கார்த்திகா, முனைவர் H. சங்கரராமன், முனைவர் N. நவீனா, மற்றும் நாட்டு நலப்பணி திட்ட பிரதிநிதிகள் இணைந்து இம்முகாமை மிகவும் சிறப்பாக நடத்தினர்.



**நீலப் புரட்சி**
**(Blue Revolution)**

வினா : நீலப் புரட்சி தொடர்புடைய துறை எது?

பதில் : மீன் வளர்ப்பு

# மூலிகை சாகுபடி மற்றும் சந்தை வாய்ப்புகள் குறித்து ஒருநாள் சிறப்பு கருத்தரங்கம்

வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம் மற்றும் பாரத் ஃபெட் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் இணைந்து திருப்பூர் மாவட்டத்தில் பெருமாநல்லூரில் உள்ள கிருஷ்ண மஹாலில் 2025 ஏப்ரல் 25ஆம் தேதி மூலிகை சாகுபடி மற்றும் சந்தை வாய்ப்புகள் பற்றி ஒரு நாள் சிறப்பு கருத்தரங்கு நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 280க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் பங்குதாரர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். கருத்தரங்கில் வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் முதல்வர் முனைவர் பிரபாகர், மூலிகை பயிர் சாகுபடியின் மூலம் விவசாயிகள் குறைந்த முதலீட்டில் நிறைவான வருமானம் பெற முடியும் என்பதை விவசாயிகளிடம் தெரிவித்தார். நபார்டு வங்கியின் சுதந்திர இயக்குனர் திரு. ராமா ஸ்ரீநிவாசன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு விவசாயத் துறையில் நபார்டின் பங்களிப்புகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் பற்றி விரிவாகப் பேசினார். மேலும் வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் இணைப்பேராசிரியர் முனைவர். க.காளிதாஸ் அவர்கள் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தில் மூலிகைச் சாகுபடி தொழிநுட்பங்களை மேம்படுத்தும் முறைகள் பற்றி விரிவாக எடுத்து கூறினார்.

இந் நிகழ்வு, மூலிகைத் துறையின் விஞ்ஞானிகள், நிபுணர்களால் நடத்தப்பட்ட பல தொழில்நுட்ப அமர்வுகளைக் கொண்டிருந்தது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் முனைவர். மா. விசாலட்சி, மூலிகை உற்பத்தித் தொழில்நுட்பங்கள் குறித்துப் பேசினார். திரு. ராம சண்முகம் கற்றாழையின் முக்கியத்துவம் மற்றும் பயிரிடும் முறை பற்றி விளக்கினார். வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் இணைப்பேராசிரியர் முனைவர் சி. கிருஷ்ணமூர்த்தி, மூலிகையில் பல்வேறு கால சூழ்நிலைகளில் சாகுபடியை செய்யும் நடைமுறை பற்றி எடுத்துரைத்தார். ஈஷா காவேரிகூக்குரால் திட்டத்தின் திருப்பூர் ஒருங்கிணைப்பாளர் திரு. கே. இலங்கோ, மரப்பயிர்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். இறுதியாக, பொள்ளாச்சி நர்சரியின் உரிமையாளர் முனைவர் பூபாலன், மூலிகை பயிர் தேர்வு மற்றும் உற்பத்தித் தொழில்நுட்பம் குறித்த தனது விளக்கத்துடன் தொழில்நுட்ப அமர்வுகளை நிறைவு செய்தார்.

இந்நிகழ்வு, மூலிகை பயிர் உற்பத்தி தேர்வு, மதிப்புக்கூட்டல் மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்த விவசாயிகளின் அறிவையும் விழிப்புணர்வையும் வெகுவாக மேம்படுத்தும் விதமாக அமைந்தது. இந்நிகழ்வின் நிறைவாக உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் பங்குதாரர்களுக்குப் பங்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந் நிகழ்ச்சியினை வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் திட்ட ஒருங்கினைப்பாளர் திரு. முருகானந்தம், அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்.



# தேங்காய் சார்ந்த மதிப்புக் கூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் குறித்து விவசாயிகளுக்கு இரண்டு நாள் பயிற்சி

பொள்ளாச்சி வானவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தில் உள்ள வேளாண் தொழில் அபிவிருத்தி மையத்தில் 20.05.2025 மற்றும் 21.05.2025 ஆகிய தேதிகளில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பொள்ளாச்சி வடக்கு வட்டாரத்தில் உள்ள மாரியம்மன் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தைச் சேர்ந்த 20 விவசாயிகள் இந்தப் பயிற்சியில் பங்கேற்றனர். பயிற்சிக்கான அட்டவணை யாதெனில்:

**நாள்1: 20.05.2025**

காலை 9:00 மணி முதல் பிற்பகல் 1:00 மணி வரை தேங்காய் சிப்ஸ் மற்றும் உலர்ந்த தேங்காய் துருவல் தயாரிக்கும் முறை பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது.

மதியம் 2:00 மணி முதல் - 5:00 மணி வரை தேங்காய் உணவுப் பொருட்களின் மதிப்பு கூட்டல் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

**நாள்2: 21.05.2025**

காலை 9:00 மணி முதல் பிற்பகல் 1:00 மணி வரை தேங்காய் ஜாம் மற்றும் தேங்காய் கண்டன்ஸ்டு பால் தயாரிக்கும் முறை விளக்கமும் மற்றும் தயார் செய்து காண்பிக்கப்பட்டது.

மதியம் 2:00 மணி முதல் - 5:00 மணி வரை தேங்காய் சாக்லேட் உருண்டைகள் மற்றும் தேங்காய் சிப்ஸ் தயாரிப்பதற்கான முழு செயல்முறை பயிற்சி அளிக்கப்பட்டது,

தேங்காய் டீஷெல்லர், தேங்காய் டெஸ்டா ரிமூவர், தேங்காய் பல்வரைசர், தேங்காய் பால் எக்ஸ்ட்ராக்டர், தேங்காய் சிப்ஸ் ஸ்லைசர் மற்றும் பேஸ்டுரைசர் கம் வாக்யூம் ஆவியாக்கும் இயந்திரம் உள்ளிட்ட தேங்காய் உணவு பதப்படுத்தும் இயந்திரங்களைப் பயன்படுத்தி அனைத்து உணவுப் பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டன. தேங்காய் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கப்பட்டன.



**வெள்ளைப் புரட்சி**
**(White Revolution)**

வினா: வெள்ளைப் புரட்சிக்கு வித்திட்டவர் யார்?

பதில்: வர்கீஸ் குரியன்

# உலக பல்லுயிர் தினம் - மே 22, 2025

உலக பல்லுயிர் தினம் அல்லது பன்னாட்டு உயிரினப் பன்முகத்தன்மை தினம்(International Day for Biological Diversity) ஆண்டுதோறும் மே 22 அன்று கொண்டாடப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபை (United Nations) இதை உயிரினப் பன்முகத்தன்மையை மேம்படுத்துவதற்காக அங்கீகரித்துள்ளது. இத்தினத்தை வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தில் 22.05.2025 அன்று கொண்டாடப்பட்டது. இதில் முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு நாட்டு நலப்பனி திட்ட மாணவ/மாணவிகள் வேளாண்மையில் பல்லுயிர்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் பல்வேறு மாதிரிகள், விளக்கக்காட்சிகள், வரைபடங்கள், வரைபட ஓவியங்கள் மற்றும் புகைப்படங்களை சித்தரித்தனர். மேலும், தீஷன் (DEESAN) பண்ணை, பொள்ளாச்சியைச் சேர்ந்த பிரபல வேளாண் நிபுணர் திரு. ஞானசரவணன் மாணவர்களுக்கு சிறப்புரை வழங்கினார்.





**காவிரி நதி வழக்குகள் – நீருக்கு நியாயம் வேண்டிய நிலை**

தலைமுறை தலைமுறையாக, காவிரி நீர் பங்கீட்டில் தமிழக விவசாயிகள் எதிர்கொண்ட பிரச்சனைகள், சட்டப்பூர்வமான போராட்டங்கள் மற்றும் நீதிமன்ற விசாரணைகள் இவை அனைத்தும் நீர் உரிமை மற்றும் உழவர் உரிமையை பற்றிய நவீன வரலாறு.

# BIRD லக்னோவில் மூன்று நாள் டிஜிட்டல் மார்க்கெட்டிங் பயிற்சி முகாம்

லக்னோவில் செயல்பட்டு வரும் வங்கிப் புறநகர் மேம்பாட்டு நிறுவனம் (BIRD), NABARD, தனது கல்வி சேவைகளின் ஒரு பகுதியாக மே 26 முதல் 28, 2025 வரை மூன்று நாட்கள் டிஜிட்டல் மார்க்கெட்டிங் - பயிற்சி முகாமை சிறப்பாக நடத்தியது.

இந்த முகாமில், கல்லூரியின் இணைப் பேராசிரியர் முனைவர். க. காளிதாஸ் அவர்கள் கலந்து கொண்டு, டிஜிட்டல் மார்க்கெட்டிங் குறித்த பல அம்சங்களை மேற்கொள்ளும் குழுப்பணிகள் மற்றும் நடைமுறை பயிற்சிகளில் ஈடுபட்டார். முகாமின் மூலம் பங்கேற்பாளர்கள் அடிப்படை இணையதள வடிவமைப்பு, சமூக ஊடகப் பிரச்சாரம், செயல்திறன் பகுப்பாய்வு வரை பல்வேறு தலைப்புகளை விரிவாக கற்றுன் கொண்டார்.

முகாம் நிறைவில் இயக்குனரும் பாடநெறி இயக்குனர்களும் பங்கேற்பாளர்களுக்கு வாழ்த்துரை வழங்கி, தொடர்ந்து டிஜிட்டல் துறையில் கற்றுக் கொள்ளும் தேவையை வலியுறுத்தினர்.

BANKERS INSTITUTE OF RURAL DEVELOPMENT, LUCKNOW

Digital Marketing- Hands on Training

( 26 to 28 May, 2025 )



From Left to Right

Sitting on Chairs : Shiva Rajput, Neelam Pandey, Rajni, Neelima Rani, Sanjeev Raman (Prog. Director), Shefali Agrawal (Joint Director), Suman Shukla (Prog. Director), Kumari Savita, Soni Awasthi, Bhumika Korat, Reena Pandey.

Standing 1st Row : Gireesan Vamadevan, G. Udaya Kumar, R. Durai Poovendran, Gokul S., K. Kalidas, Milap Singh, Tushar, Abhishek Kumar, Rajni Kant Pandey, Piyush Kathiriya, Nitesh Yadav, Abhishek Kumar Pandey, Lalit Kumar.

Standing 2nd Row : Pradeep Kumar, Gyanendra Singh, Shivam Yadav, Gaurav Rathore, Ashish Prasad Patel, Abhishek Pandey, Roushan Kumar Thakur, Vishal R. Bheda, Shekhar Mani Tiwari, Vinod Kumar Sharma, Rohit Srivastava.

Priya Studio, Alambagh, Lko. Call- 9335280723, 7007756794

# அக்ரி கிளினிக் மற்றும் அக்ரி பிசினெஸ் சென்டர்ஸ் மேனேஜ் (MANAGE) அலுவலர்களுக்கு 2 நாட்கள் பயிற்சி

வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம் பல்வேறு விரிவாக்கப் பயிற்சித் துறையில் சிறப்பான முறையில் கடந்த 8 ஆண்டுகளாக செயல்பட்டுக்கொண்டு வருகிறது அதில் மத்திய அரசின் திட்டம்மான அக்ரி கிளினிக் மற்றும் அக்ரி பிசினெஸ் சென்டர்ஸ் மேனேஜ் (MANAGE) எனப்படும் 45 நாட்கள் இலவசப் பயிற்சி நமது கல்லூரியில் கடந்த 4 ஆண்டுகளாக செயல்பட்டுக் கொண்டு வருகின்றது. இதில் சுமார் 68% நமது கல்லூரியில் பயிற்சி பெற்ற தொழில் முனைவோர்களாக உருவாகி உள்ளனர். சுமார் 20 க்கும் மேற்பட்டோர் வங்கியில் கடன்களைப் பெற்று தொழிலினை நடத்தி வருகின்றனர். மேலும் (27.05.2025 மற்றும் 28.05.2025) ஆகிய இரண்டு நாட்கள் ஹைதராபாத்தில் உள்ள அக்ரி கிளினிக் மற்றும் அக்ரி பிசினஸ் சென்டர் (MANAGE) வளாகத்தில் நடைபெற்ற பயிற்சியில் வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் ஒருகிணைப்பாளர் திரு. சிற்பி பாலசுப்பிரமணியம் அந்த பயிற்சியில் பங்கேற்றார். இப்பயிற்சியில் பல்வேறு தொழில் சார்ந்த தொழில்நுட்பங்களை எவ்வாறு செயல்படுத்துவதும் மற்றும் தொழில் முனைவோர்களாக உருவாக்க எவ்வாறு களப் பயிற்சி அளிக்க வேண்டும், ஒரு நிறுவனத்தை எவ்வாறு இலாபகரமாக கொண்டு செல்ல வேண்டும் என்பது குறித்தும், தொழில்களை தொடங்கிய பின் எவ்வாறு நஷ்டம் இல்லாமல் கொண்டு செல்வது பற்றியும், தொழில் முனைவோர்களாக உருவாகிய பின் வரவு செலவுகள் அனைத்தும் எவ்வாறு எதிர்கொள்வது குறித்தும், 45 நாட்கள் பயிற்சி முடித்த தொழில் முனைவோர்கள் எவ்வாறு கடன் பெற வேண்டும் கடன்களைப் பெற வங்கிகளுக்கு எவ்வாறு கடன் பத்திரங்களை தயார் செய்வது குறித்து பயிற்சியில் மேற்கொள்ளப்பட்டது.



# உலக புகையிலை எதிர்ப்பு தினம் (World No Tobacco Day) - மே 31, 2025



உலக புகையிலை எதிர்ப்பு தினம் ஒவ்வொரு ஆண்டும் மே 31ம் தேதி அன்று உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்படுகிறது. இது புகையிலையின் தீமைகளைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் கடைப்பிடிக்கப்படுகிறது. இதனை பொள்ளாச்சியில் செயல்பட்டு வரும் வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தில் 31.05.2025 அன்று இரண்டாம் ஆண்டு நாட்டு நலப்பனி திட்ட மாணவர்கள் புகையிலையின் தீமைகளைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் பேரணியை மணக்கடவு கிராமத்தில் நடத்தினர். மேலும் கல்லூரியின் முதல்வர் முனைவர். பிரபாகர் அவர்கள் முன்நிலையில் மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் புகையிலை எதிர்ப்பு உறுதிமொழியை ஏற்றனர்.

**நீலப் புரட்சி (Blue Revolution)**

வினா: இந்தியாவில், நீலப் புரட்சியின் மூலம் எந்த வகை உற்பத்தியில் முன்னணியாகியுள்ளது?

பதில்: நீர்வழி உற்பத்திற்கு (Aquaculture)




கடந்த 05.06.2025 அன்று, நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள் உலக சூற்றுச் சூழல் தினத்தை போற்றும் வகையில் வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் வளாகத்தில் சுமார் 50 மரக்கன்றுகளை நட்டினார்கள். இந்நிகழ்ச்சியில் மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர். இந்த செயல்பாடு மாணவர்களுக்கு இயற்கை மீதான பற்று மற்றும், சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியத்தையும் வலியுறுத்தும் சிறந்த வாய்ப்பாக அமைந்தது.

---




தமிழ்நாடு அரசின் வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில் ஈரோடு மாவட்டம் பெருந்துறை அருகே விஜயமங்கலம் சுங்கச்சாவடி பகுதியில் வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம். 3 நாட்கள் (11.06.2025, 12.06.2025 மற்றும் 13.06.2025) நடைப்பெற்றது.

## ❋ கல்லூரி நிகழ்வுகள் ❋

இதன் தொடக்க விழா 11.06.2025 (புதன்கிழமை) மதியம் 12.30 மணி அளவில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு கண்காட்சி அரங்கை திறந்து வைத்தார்.

மேலும், விவசாயிகளுக்கு தமிழ்நாடு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கி உரையாற்றினார். விழாவில் அமைச்சர்கள், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள், அரசு துறை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

மொத்தம் 200 கண்காட்சி அரங்குகள், கருத்தரங்கு என பல்வேறு ஏற்பாடுகள் செய்யபட்டுள்ளன. இந்த கண்காட்சி மற்றும் கருத்தரங்கில் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் பங்கேற்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 50ஆயிரத்திக்கும் மேல்பட்ட விவசாயிகள் கண்காட்சியை பார்வையிட்டனர்.

பல்வேறு அரசு வேளாண்மைத்துறை சார்ந்த அரங்குகள், உழவர் உற்பத்தியாளார் நிறுவனங்கள், தொழில்முனைவோர்கள், இதர தனியார் உர நிறுவனங்கள் தங்களது உற்பத்தி பொருட்களை அரங்குகள் மூலம் காட்சிப்படுத்தினர்.

வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் வழிகாட்டுதல்படி கரூர் கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்தில் இயங்கக்கூடிய உழவர் உற்பத்தியாளர் நிறுவனமான கோதனம் கிரீன் லைஃப் பெட் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் தங்களது உற்பத்தி பொருட்களை அரங்கில் வைத்து காட்சிப்படுத்தி, விற்பனை செய்தார். நிறுவனம் தனது உற்பத்தி பொருட்களான பால்கோவா, மண்கட்டுன துவரை, தேன் போன்ற பொருட்களை இக்கண்காட்சியில் விற்பனை செய்தனர். இதன்முலம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு பெரிய முன்னேற்றமாக அமைந்தது.



**பெருந்தலைவர் காமராசர் – விவசாய வளர்ச்சிக்கான முன்னோடி**

தமிழக முதல்வராக இருந்த காமராசர், சாகுபடியை மேம்படுத்தி, கிராமப்புற வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியவர். பள்ளிகள், அணைகள், நீர்தேக்கக் குழிகள் இவை அனைத்தும் தமிழ்நாட்டின் உழவுக் கணவாயிகளுக்குத் துணை நின்றன.

# உலக இரத்த வழங்குவோர் தினம் 14.06.2025

உலக இரத்த வழங்குவோர் தினத்தை முன்னிட்டு ஜுன் மாதம் 14ம் தேதி இரத்த தான சிறப்பு முகாம் பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் நடைபெற்றது. இந்த முகாமினை, வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் நாட்டு நலப்பணி திட்டம் மற்றும் பொள்ளாச்சி அரசு தலைமை மருத்துவமனை மருத்துவ குழுவுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது. இம்முகாமில், வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் மாணவர்கள் 37 பேர் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தனர். இம்முகாமினை பொள்ளாச்சி அரசு தலைமை மருத்துவமனை மருத்துவ குழுவுடன் வாணவராயர் வேளாண்மைக் கல்லூரியின் நாட்டு நலப்பணி திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் நாட்டு நலப்பணி திட்ட பிரதிநிதிகள் இணைந்து மிகவும் சிறப்பாக நடத்தினர்.









**பசுமை புரட்சி தமிழகம்**
**டெல்டா நிலம் முதல் கோயம்புத்தூர் வரை**

1960களில், பசுமை புரட்சி தமிழ்நாட்டின் டெல்டா பகுதிகளில் (தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம்) மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு போன்ற இடங்களில் அத்துடன் தேன், காடை, மாடுகள் உள்ளிட்ட இணை உற்பத்திகளும் மேம்படுத்தப்பட்டன.

# சர்வதேச யோகா தினம் - ஜூன் 21, 2025

சர்வதேச யோகா தினம் 21.06.2025 அன்று வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தில், பொள்ளாச்சி கருத்தரங்கு கூடத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் இரண்டாம் ஆண்டு இளநிலை வேளாண்மை நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள் (2023- ஆம் ஆண்டு) ஆர்வமுடன் பங்கேற்றனர். யோகாவின் நடைமுறை அனுபவத்தை வழங்கும் நோக்குடன் இந்நிகழ்வை திட்டமிட்டு, பயிற்சி பெற்ற யோகா பயிற்சியாளர் மற்றும் இறுதி ஆண்டு இளநிலை வேளாண் பயிலும் மாணவரான திரு மோகன்ராம் அவர்கள் வழிநடத்தினார். இந்த பயிற்சி நிகழ்ச்சியில் சுகாசனம், பத்மாசனம், பஸ்சிமோத்தாசனம், புஜங்காசனம், தனுராசனம், வீரபத்திராசனம் மற்றும் சர்வாங்காசனம் ஆகிய யோகாசனங்கள் நடத்தப்பட்டன. சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற இந்நிகழ்வு “ஒரே பூமி, ஒரே வாழ்வு” என்ற 2025 யோகா தினத்தின் தலைப்பை உணர்வுபூர்வமாக பிரதிபலித்தது. இது தனிநபர் நலத்தையும் உலகளாவிய ஆரோக்கியத்தையும் ஒருங்கிணைக்கும் கருத்தை வலியுறுத்தியது.



### போதைப்பொருள் துஷ்பிரயோகம் மற்றும் சட்டவிரோதகடத்தலுக்கு எதிரான சர்வதேச தினம் ஜுன் - 26

# போதைப்பொருட்களுக்கெதிரான விழிப்புணர்வு பேரணி 26.06.2024

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 26 அன்று போதைப்பொருள் துஷ்பிரயோகம் மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினம் உலகளவில் அனுசரிக்கப்படுகிறது. இந்நாளை முன்னிட்டு, 2025 ஜூன் 26 அன்று, வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம், மற்றும் தமிழ்நாடு காவல்துறை ஆனைமலை வட்டம், இணைந்து வலந்தாயமரத்தில் விழிப்புணர்வு பேரணியை நடத்தினர். இதில் முதலாம் ஆண்டு நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள் பங்கேற்று போதைப்பொருள் பயன்படுத்துதல் துஷ்பிரயோகம், சட்டவிரோத கடத்தல் முதலியவற்றிக்கு எதிராக முழக்கங்களை எழுப்பி சமூகம், கல்வி, கலாச்சாரம் மற்றும் குடும்ப நலனில் போதை மருந்துகளால் ஏற்படும் பாதிப்புகளை எடுத்துரைத்தனர். இந்த விழிப்புணர்வு பேரணியை காவல் ஆய்வாளர் திரு. N. முத்துபாண்டியன் அவர்கள் கொடியசைத்து தொடக்கி வைத்தார். மேலும் இப்பேரணியை சிறப்பு காவல் ஆய்வாளர் திரு.V. முருகவேல், காவல் உதவியாளர் திரு.G. இலக்ஷ்மனசாமி மற்றும் வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் நாட்டு நலப்பணி திட்ட அதிகாரிகள் முனைவர். G. தாமோதரன், முனைவர். N.நவீனா, முனைவர். H.சங்கரராமன் மற்றும் முனைவர் M. கார்த்திகா ஆகியோர் இணைந்து பேரணியை ஒருங்கிணைத்தனர்.



# தேசிய தோட்டக்கலை கண்காட்சி - 2025




2025 - ஆம் ஆண்டிற்கான தேசிய தோட்டக்கலை கண்காட்சி இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமம் (ICAR) மற்றும் இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனம் (IIHR) ஏற்பாட்டில் 250 க்கும் மேற்பட்ட கண்காட்சி மையங்களை காட்சிப்படுத்தி இருந்தன. அவை அனைத்தும் தோட்டக்கலை தொழில்நுட்பங்களின் பல்வேறு வகைகளில் தங்கள் புதிய கண்டுபிடிப்புகளை வெளிக்காட்டும் நிறுவனங்கள், அமைப்புகள் மற்றும் பயிர் மேம்பாடு, பயிர் உற்பத்தி, பயிர் பாதுகாப்பு, அறுவடை பின்சார்பு மேலாண்மை மற்றும் மதிப்புகூட்டு இயந்திரங்கள் போன்ற பகுதிகளில் ICAR-IIHR மூலம் உருவாக்கப்பட்ட வகைகள் மற்றும் தொழில்நுட்பங்கள் காட்சிப்படுத்தப்பட்டு இருந்தது. இந்த கண்டுபிடிப்புகள் தோட்டக்கலை நடைமுறைகளில் உற்பத்தி, திறன் மற்றும் நிலைத்தன்மையை காட்டுவதாக அமைந்தது. இக்கண்காட்சிக்கு 11 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் (FPO) 28 விவசாயிகள் பெங்களூருவில் உள்ள தேசிய தோட்டக்கலை கண்காட்சி - 2025 வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் மூலமாக அழைத்து செல்லப்பட்டனர்.

இந்த மாபெரும் நிகழ்வு அறிவு பரிமாற்றம், தொழில்நுட்ப மாற்றம் மற்றும் நிலையான உற்பத்தி மேம்படுத்துதல் ஆகிய புதிய நடைமுறைகளை ஊக்குவிக்க சிறந்த கண்காட்சியாக இருந்தது. முனைவர் செந்தில் குமரன் அவர்கள், விஞ்ஞானி, இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனம் நிகழ்ச்சி முழுவதும் பங்கேற்பாளர்களுக்கான தங்குமிடம் மற்றும் வழிகாட்டுதல் ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்தார். இந்நிகழ்ச்சியை வாணவரயார் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. முருகானந்தம், மாவட்ட திட்ட ஒருங்கிணைபாளர், திரு. ராகுல் குமார், ஆகியோர் ஏற்பாடு செய்து இருந்தனர்.

VANAVARAYAR
Institute of Agriculture
Enriching India

Ministry of Agriculture
& Farmers Welfare.
Government of India

National Institute of Agricultural
Extension Management

# வேளாண் மற்றும் பொது அறிவியல் பட்டதாரிகளுக்கான 45 நாட்கள் இலவசப் பயிற்சி

## Agri Clinics & Agri Business Centre Scheme
(மத்திய வேளாண் அமைச்சகத்தின் திட்டம்)



**கல்வித் தகுதி**
வேளாண் மற்றும் பொது அறிவியல் சார்ந்த படிப்புகள்



**வயது**
18 முதல் 60 வரை





**வங்கிக்கடன்**
5 லட்சம் முதல் 1 கோடி வரை




### மானியம்
பொது பிரிவிற்கு : 36%
பெண்கள் மற்றும் இதர வகுப்பினர் : 44%

### வசதிகள்
இலவச தங்குமிடம், உணவு, பயிற்சி ஏடுகள், தொழில், நிர்வாகம் மற்றும் திட்டமிடும் பயிற்சிகள். ஆராய்ச்சி மற்றும் தொழில் நுட்ப பயிற்சி மையங்களைப் பார்வையிடுதல். வங்கிக்கான திட்ட அறிக்கைகள் தயாரித்து கொடுத்தல்.

AGRI-BUSINESS INCUBATOR
ABI

**அக்ரி கிளினிக் & அக்ரி பிசினஸ் சென்டர்**
**வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனம்**
மணக்கடவு, பொள்ளாச்சி(தாலுக்கா), கோவை (மாவட்டம்) - 642103
+91 74026 18009, +91 99429 08466 edp@via.ac.in www.via.ac.in



VANAVARAYAR
Institute of Agriculture

VIA




www.via.ac.in

Mail : info@via.ac.in | Phone : +91 74026 18001